**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், அருப்புக்கோட்டை.**

**Probate O.P.No. 254 /2025**

எதிர்மனுதாரர் தரப்பு 1வது சாட்சி பாலாராணி என்பவரின் வாக்குமூலம் ( 1869 ஆண்டு சாட்சிய சட்டம் 44 வது பிரிவு 6 வது விதியின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாலாராணி | சாதி | : | |
| கணவர் பெயர் | : | சாந்தாராஜ் | சமயம் | : | |
| கிராமம் | : | கோபாலபுரம் | தொழில் | : | விவசாய கூலி |
| தாலுகா | : | அருப்புக்கோட்டை | வயது | : | 43 |

நாள் : 03.06.2026

எ.ம.சா.1 – பாலாராணி

**முதல் விசாரணை :–**

நான் இந்த வழக்கில் 1ம் எதிர்மனுதாரர் ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை எனது தரப்பு சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

எ.ம.சா.ஆ.1 – எனது ஆதார் அட்டை நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது)

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை –**

எனது கணவர் கடந்த 20.01.2022 அன்று இறந்துவிட்டார். அவர் உயிருடன் இருக்கும் போது நல்ல மன நிலையில் சுய நினைவுடன் யாருடைய தூண்டுதலுமின்றி மனுதாரரான என்னுடைய மகனுக்கு அவருக்கு சொந்தமான கோபாலபுரம் கிராமத்தில் அமைந்துள்ள வீட்டை கடந்த 21.08.2021 அன்று ஒரு பதிவு செய்யப்படாத உயில் சாசனம் மூலம் எழுதி வைத்தார் என்றால் சரிதான். நான் அந்த உயிலை மறுக்கவில்லை என்றால் சரிதான். உயில் படி மனுதாரர் தான் அந்த சொத்தின் உரிமையாளர் என்றால் சரிதான். மேற்சொன்ன சொத்தை அடமானம் வைத்து என் கணவர் மதுரை ஆக்ஸிஸ் வங்கியில் பெற்ற கடனை என் கணவரின் இறப்பிற்கு பிறகு மனுதாரர் தான் அடைத்து வருகிறார் என்றால் சரிதான். மனுதாரரை தவிர எனக்கு வேறு குழந்தைகள் இல்லை என்றால் சரிதான்.

**மறு விசாரணை –** இல்லை.

இத்திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VASANTHA KUMAR

Digitally signed by M VASANTHA KUMAR
Date: 2026.06.03 18:21:41 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி
அருப்புக்கோட்டை.